**CC.No. 165/2018 (JM.No.II, DHARMAPURI)**

**18.09.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**(1வது எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை)**

**PW–6 : திரு.லோகநாதன், த/பெ.கோவிந்தசாமி**

<u>முதல் விசாரணை</u>

நான் சந்திரநல்லூரில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. பலவருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாரிசெட்டி வீட்டிற்கு அருகே ரோட்டில் வந்துகொண்டிருக்கும் போது போலிசார் கேட்டுகொண்டதன்பேரில் நான் கையெழுத்து இட்டேன். நான் கையெழுத்து இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து மட்டும் **<u>அ.த.சா.ஆ.2</u>** ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

கடந்த 26.01.2014ம் தேதியன்று காலை 11.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்தை போலிசார் பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார்செய்ததாகவும், அதில் சாட்சியாக இருந்து முதல் கையெழுத்து இட்டுவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக கையெழுத்து இட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,<br>நீதித்துறை நடுவர் எண்.II,<br>தருமபுரி.

**CC.No. 165/2018 (JM.No.II, DHARMAPURI)**

**18.09.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**(1வது எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை)**

**PW–7 : திரு.ரமேஷ், த/பெ.சின்னாஞ்செட்டி**

**<u>முதல் விசாரணை</u>**

நான் சந்திரநல்லூரில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. பல வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாரிசெட்டி வீட்டிற்கு அருகே ரோட்டில் வந்துகொண்டிருக்கும் போது போலிசார் கேட்டுகொண்டதன்பேரில் நான் கையெழுத்து இட்டேன். நான் கையெழுத்து இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **<u>அ.த.சா.ஆ.3</u>** ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

கடந்த 26.01.2014ம் தேதியன்று காலை 11.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்தை போலிசார் பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார்செய்ததாகவும், அதில் சாட்சியாக இருந்து இரண்டாம் கையெழுத்து இட்டுவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக கையெழுத்து இட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.